**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 147 of 2019

Deposition of P.W.1

Name of the Witness: திரு.சீனன் (எ) சீனிவாசன்

Date : 13.06.2025

***1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி***

3) எனக்கு திருமணமாகி 21 வருடங்களாகிறது. எனக்கு திருமணம் ஆகும் போது என் அப்பா, அம்மா உயிருடன் இருந்தார்கள். என்னுடைய மனைவியின் ஊர் நக்கல்பட்டி. என் திருமணத்தின் போது என் மனைவிக்கு சீதனமாக 10 சென்ட் நிலம் கொடுத்தார். அந்த நிலத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. திருமணத்தின் போது என் மனைவிக்கு 5 சவரன் நகை போட்டார்களா. வேறு எதுவும் என் மனைவிக்கு சீதனமாக கொடுக்கவில்லை.

4) நான் பால் வியாபாரம் செய்த போது 1, 2ம் பிரதிவாதி என்னிடம் தான் அவர்களின் பாலை என்னிடம் கொடுப்பார்கள். நான் அவர்களிடம் பாலை வாங்கி கம்பெனியில் விற்று விடுவேன். இது போல் 20 வருடங்களாக தொழில் செய்து வருகிறேன். நான் பால் வியாபாரத்தில் வந்த பணத்தை வைத்து கூட்டு குடும்பத்தை பராமரித்து வந்தேன் என்றால் சரியல்ல. எல்லோரும் தனித் தனியாக குடும்பம் நடத்தி வந்தோம். செக்கோடி கிராம சர்வே எண் 224ல் 4.12 ஏக்கர் நிலம் பொதுவஸ்தர்கள் முன்னிலையில் விற்று அந்த பணத்தில்

எனது சகோதரிகளுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த நிலத்தை விற்கும் போது அப்பா உயிருடன் இல்லை. அம்மா உயிருடன் இருந்தார்.

5) செக்கோடி கிராம சர்வே எண் 608ல் 2.50 ஏக்கர் நிலம் பொதுவாக இருந்தது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் தனிப்பட்ட கடனை அடைப்பதற்காக மேற்சொன்ன சொத்து விற்கப்பட்டு கடன் அடைக்கப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 695/1ல் என் அம்மா பழனியம்மாவுக்கு 1 ஏக்கர் 10 சென்ட் அவருடைய ஜீவணத்திற்காக ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் அம்மா இறந்து 22 வருடங்களாகிறது. என் அம்மா இறந்த பிறகு அந்த சொத்து பொதுவாக தான் உள்ளது. சர்வே எண் 608ல் 2 1/2 ஏக்கர் நிலத்தை விற்ற பணத்தில் கடன் போக மீதி பணத்தை என் அம்மா என்னிடம் கொடுத்தார் என்றாலும், அந்த பணத்தில் நான் டிரேக்டர் வாங்கி என் மனைவி பெயரில் வாங்கினேன் என்றால் சரியல்ல. என்னிடம் டிரேக்டர் உள்ளது. பதிவு எண் நியாபகம் இல்லை. 1, 2 பிரதிவாதிகள் 2019 வரை கணக்கு காட்டியுள்ளார்கள் என்றாலும், நானும் அவர்களிடம் வரவு செலவு கணக்கை பார்த்து பணம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

6) நான் தான் விவசாயத்தில் வந்த வருமானத்தை கொண்டும், என் தாயாரின் வருமானத்தில் வந்த வருமானத்தை கொண்டும் சொத்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு பிறகு சொத்து

வாங்கி என் மனைவி பெயரில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4, 5 பிரதிவாதிகள் என் அக்காவின் பிள்ளைகள். 2ம் பிரதிவாதியின் கடனை அடைப்பதற்காக4, 5 பிரதிவாதிகளுக்கு சொத்துக்கள் விற்கப்பட்டுள்ளது. என் மனைவி பெயரில் உள்ள சொத்தும் கூட்டு குடும்ப சொத்தும் என்றாலும், அதை சேர்க்காமல் வழக்கை தாக்கல் செய்துள்ளது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

7) 2ம் பிரதிவாதி ரூபாய் 60லட்சம் செலவு செய்து வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல. குடும்ப வருமானத்திலிருந்து தான் வீடு கட்டப்பட்டது. என் மனைவி பெயரில் இருக்கும் சொத்துக்களையும் சேர்த்து பாகம் பிரிப்பதற்கு 1ம் பிரதிவாதிக்கு ஆட்பேசனை இல்லை என்றால் சரியல்ல. என் மனைவி பெயரில் இருக்கும் சொத்தை பற்றி வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் மனைவி பெயரில் உளள் சொத்து 2002ல் வாங்கப்பட்டது. அது பொது சொத்து இல்லை. நான் பொய் சொல்கிறேன் என்றாலும், அந்த சொத்து கூட்டு குடும்ப சொத்து என்றால் சரியல்ல.